7. அரசினர் தீர்மானம்

திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் திருவாளர்கள் எ.வ. வேலு, அ. சௌந்தரபாண்டியன், நா. இராமகிருஷ்ணன், டி.பி.எம். மைதீன்கான் ஆகியோரைப் பேரவைப் பணிகளினின்று தற்காலிகமாக நீக்கி வைத்தல்

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் தொடர்ந்து பலமுறை மிகவும் கண்ணியமான முறையில் வேண்டுகோள் விடுத்தீர்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையே வசைபாடுகின்ற முறையினை ஏற்படுத்தியிருக்கின்ற காரணத்தினால், மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. எ.வ. வேலு, திரு. அ. சௌந்தரபாண்டியன், திரு. டி.பி.எம். மைதீன்கான், திரு. நா. இராமகிருஷ்ணன் ஆகியோரை அவை நடவடிக்கைகளிலிருந்து தொடர்ந்து 10 நாட்கள் நீக்கிவைக்கும்படி தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பேரவையின் அலுவல்களை நடைபெறவிடாமல் இடைமறித்தும், பேரவையின் விதிகளுக்கு மாறாக அவையில் குந்தகம் செய்துவருவதாலும், சட்டமன்றப் பேரவை விதி 121, உள் விதி (2)—ன்கீழ் இன்று அவைக்கு வருகை தந்திருக்கும் திருவாளர்கள் எ.வ. வேலு, அ. சௌந்தரபாண்டியன், டி.பி.எம். மைதீன்கான், நா. இராமகிருஷ்ணன் ஆகிய இந்த நான்கு உறுப்பினர்களையும் 10 நாட்கள் வரை பேரவைப் பணிகளினின்று தற்காலிக நீக்கம் செய்யவேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (குறுக்கீடு)

பிற்பகல் 12—20

மாண்புமிகு உறுப்பினர் தயவு செய்து உட்காருங்கள். எவ்வளவு Option *கொடுத்தேன்? இல்லை, உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைத் தலைவர் அவர்கள் நான் கொண்டுவந்த தீர்மானத்தின்மீது இங்கே ஓட்டெடுப்பு நடத்தி முடிவுக்குக் கொண்டுவந்தபின் அதில் விவாதம் நடத்துவதற்கு வாய்ப்பு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

6. மானியக் கோரிக்கைகள், 2012–2013, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

கோரிக்கை எண் 5–வேளாண்மைத் துறை—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கா. தமிழரசன் அவர்கள்.*

திரு. கா. தமிழரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் ஒன்றை மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். திரு. அழகிரி அவர்கள் மக்களிடமிருந்து வாக்குகளை வாங்கிவிட்டு பார்லிமென்ட்டில் ஒரு நாள்கூட, ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை என்பதுதான் அவர் மக்களுக்கு செய்த கின்னஸ் புத்தகத்தில் இடம்பெற வேண்டிய பெரிய சாதனை என்று சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். தி.மு.க. காரர்கள் கொலை எங்கு நடந்தது என்று கேட்டார்கள். நாங்கள் சொல்வதைக்கூட விட்டுவிடுங்கள். இவர்களுடைய மைத்துனர் திரு. கலாநிதி மாறன் அவர்கள், அவரது அலுவலகத்தை உடைக்கும்போது— இவர்தான் கொலை செய்தார் என்று இவர்களது கட்சிக்காரர்கள்மீது* F.I.R. *போடப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில் அவர்களே இதைச் சொன்னார்கள் என்பதை இங்கே பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன்.*

என்னுடைய தொகுதியின் சார்பாக தொகுதி கோரிக்கைகள் அனைத்தும் பேரவைத் தலைவர் அவர்களிடம் பேரவையில் பதிய வைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்த அடிப்படையிலே, ஒன்றை மட்டும் சொல்லிக்கொள்ளக்